அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் – 2006–07 மற்றும் 2007–08ஆம் ஆண்டு 5074 அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்ட கிராம ஊராட்சிகளில் 2009ம் ஆண்டு டிசம்பர் மாதத்தின் இரண்டாவது பிற்பகுதியில் ஊரக நூலகங்களில் போட்டிகள் நடத்துவதற்கான வழிகாட்டு நெறிமுறைகள் – ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

**ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மா.அதி1) துறை**

அரசாணை (நிலை) எண்.132 நாள்: 01.12.2009.

படிக்கப்பட்டவை

1. அரசாணை (நிலை) எண். 115, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நாள் 11.9.2006.
2. அரசாணை (நிலை) எண். 97, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நாள் 13.6.2007.
3. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின் கடித எண். Roc.78076/2009/AGAMT–2, நாள் 16.11.2009.

* * * * *

**<u>ஆணை</u>:**

படிக்கப்பட்டவை 1 மற்றும் 2ல் உள்ள அரசாணைகளில் முறையே 2006–2007ம் ஆண்டில் 2540 கிராம ஊராட்சிகளிலும் 2007–08ஆம் ஆண்டில் 2534 கிராம ஊராட்சிகளிலும் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தினை செயற்படுத்துவதற்கான விரிவான வழிகாட்டு நெறிமுறைகள் வெளியிடப்பட்டன. ஆக, மொத்தம் 5074 கிராம ஊராட்சிகள் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ் 2006–07 மற்றும் 2007–08 ஆம் ஆண்டுகளில் எடுத்துக் கொள்ளப்பட்டன.

2. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் படிக்கப்பட்டவை 3–ல் உள்ள தன்னுடய கடிதத்தில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் 2006–07 மற்றும் 2007–08ஆம் ஆண்டுகளில் 5074 கிராம நூலகங்கள் நிறுவப்பட்டுள்ளன என்றும் அத்தகைய அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்ட நூலகங்களுக்காக பின்வரும் ஏழு வகைகளைச் சேர்ந்த புத்தகங்கள் 1). சிறுவர்களுக்கான புத்தகங்கள் 2). இளைஞர்களுக்கான புத்தகங்கள் 3). மேற்கோள் புத்தகங்கள் 4). வல்லுநர்களால் எழுதப்பட்ட / வல்லுநர்களைப் பற்றிய புத்தகங்கள் 5) கதைப்புத்தகங்கள் 6) கதைப்புத்தகங்கள் அல்லாதவை 7) செய்யுள் மற்றும் இலக்கியம், ஏற்கனவே தேர்வு செய்யப்பட்டுள்ளன என்றும் தெரிவித்துள்ளார். ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் மேலும் தெரிவிக்கையில் நூலகங்களை பயன்படுத்துவதை ஊக்குவிக்கும் வகையில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்ட நூலகங்களுக்கான போட்டிகள் 2006–07 மற்றும் 2007–08ம் ஆண்டுகளில் ஏற்படுத்தப்பட்ட ஒவ்வொரு அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்ட நூலகத்திலும் 2009ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தின் இரண்டாவது பிற்பகுதியில் நடத்திடுவது பொருத்தமானதாக இருக்கும் என்றும் இப்போட்டியை ஒவ்வொரு கிராம ஊராட்சியிலும் அதிகபட்ச செலவினமாக ரூ.7500/–ம் கிராம ஊராட்சியின் பொதுக் கணக்கிலிருந்து எடுத்து நடத்திடலாம் என்றும் தெரிவித்துள்ளார். 2006–07 மற்றும் 2007–08ஆம் ஆண்டுக்கான 5074 அனைத்து கிராம

அண்ணா மறுமலர்ச்சி திட்ட ஊராட்சிகளில் நூலகங்களுக்கான போட்டிகள் நடத்துவதற்காக ஏற்படும் மொத்த செலவினம் ரூ.3.81 கோடி ஆகும். ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் ஊரக நூலகங்களுக்கான போட்டிகள் நடத்துவதற்கான வழிகாட்டு நெறிமுறைகளுக்கும், கிராம ஊராட்சி நிதி கணக்கிலிருந்து செலவு செய்யவும் அரசின் ஒப்புதலை கோரி உள்ளார்.

**3.** ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின் செயற்குறிப்புகளை அரசு கவனமாகப் பரிசீலித்து, ஏற்றுக்கொள்ள முடிவு செய்துள்ளது. அதன்படி, 2006–07 மற்றும் 2007–08ஆம் ஆண்டுகளுக்கான 5074 அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்ட ஊராட்சிகளில் 2009–ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தின் இரண்டாவது பிற்பகுதியில் இந்த அரசாணையின் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ள ஊரக நூலகங்களுக்கான வழிகாட்டு நெறிமுறைகளை கடைபிடித்து ஊரக நூலகங்களில் போட்டிகள் நடத்திடவும் இதற்கான செலவினம் ஒரு கிராம ஊராட்சிக்கு ரூ.7500/–க்கு (ரூபாய் ஏழாயிரத்து ஐநூறு மட்டும்) மிகாமல் இருக்கவேண்டும் என்றும் 5074 கிராம ஊராட்சிகளுக்கான மொத்த செலவினம் ரூ.3.81 கோடிக்கு மிகாமல் இருக்க வேண்டும் எனவும் அரசு ஆணையிடுகிறது.

**4.** இந்த ஆணை நிதித்துறையின் அ.சா.எண். 3358/FS/P/2009 நாள் 25.11.2009–ல் பெற்ற ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**நிரஞ்சன் மார்டி,**
அரசு செயலாளர் (பொறுப்பு)

**<u>அரசாணை (நிலை) எண். 132, ஊ.வ.(ம) ஊ.(மா.அதி1) துறை, நாள் 1.12.2009</u>**

## <u>இணைப்பு</u>

**<u>ஊரக நூலகங்களில் போட்டிகள் நடத்துவதற்கான வழிகாட்டு நெறிமுறைகள்.</u>**

1. **<u>முன்னுரை—</u>** ஊராட்சிகளில் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கு ஒரு திருப்புமுனைத் திட்டமான அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் எனும் உன்னதத் திட்டத்தை அரசு 2006—07 முதல் செயல்படுத்தி வருகிறது. ஒவ்வொரு அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்ட கிராமத்தில் நூலகங்கள் ஏற்படுத்துவது இத்திட்டத்தின் கட்டாயப் பணிகளில் ஒன்றாகும். இத்திட்டத்தின்கீழ் 2006—07 மற்றும் 2007—08—ம் ஆண்டுகளில் 5,074 அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்ட நூலகங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேலும் 7,544 அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்ட நூலகங்கள் 2008—09, 2009—10, 2010—11 ஆண்டுகளில் ஏற்படுத்தப்பட உள்ளது.

2. **ஊரக நூலகங்களில் போட்டிகள் நடத்தி, அதன்மூலம் படிக்கும் ஆர்வமூட்டுதல் மற்றும் நூலகங்கள் பயன்படுத்துவதற்கான வழிகாட்டு நெறிமுறைகள்.**

   2.1. ஊரகப் பகுதிகளில் உள்ள குழந்தைகள் மற்றும் இளைஞர்களிடையே நூலகங்களைப் பயன்படுத்துவது மற்றும் கல்வித் திறனை வெளிக் கொணரவும், ஊரக நூலகங்களுக்கான போட்டிகள், 2006—07, 2007—08 ஆண்டுகளில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தில் ஏற்படுத்தப்பட்ட கிராம ஊராட்சி நூலகங்களில் 2009—ம் ஆண்டு டிசம்பர் மாதத்தின் 2—வது பிற்பகுதியில் நடத்திட முடிவு செய்யப்பட்டுள்ளது.

2.2. போட்டியாளர்கள் 3 பிரிவுகளாக வயது மற்றும் படிக்கும் வகுப்பைப் பொறுத்து அட்டவணை 1ல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பிரிக்கப்படுவார்கள். பல்வேறு வயதுடைய குழந்தைகள் மற்றும் இளைஞர்கள் தங்களுடைய படிப்பாற்றலை வெளிப்படுத்திடவும், மனதில் ஆழப்படித்திடும் வகையில் புத்தகங்கள் படிக்கும் பழக்கத்தினை ஏற்படுத்துவதே இப்போட்டிகளின் நோக்கம் ஆகும்.

**அட்டவணை 1– வகைப்படுத்தப்பட்ட ஊரக நூலகங்களுக்கான போட்டிகளின் பிரிவுகளில் பங்கேற்பாளர்கள் விபரம்**

| வ.எண். | வகைப்பாடு | விவரம்/வகைகள் |
|---|---|---|
| **1.** | ஆரம்ப மற்றும் நடுநிலைப்பள்ளி | தற்போது 8–வது வகுப்பு வரை படிக்கும் மாணவ மாணவியர் |
| **2.** | உயர் மற்றும் மேல்நிலைப் பள்ளிகள் | தற்போது 9–வது முதல் 12–ம் வகுப்பு வரை படிக்கும் மாணவ மாணவியர் |
| **3.** | மற்றவர்கள் | சிறுவர்கள் மற்றும் இளைஞர்கள் (ஆண்கள் மற்றும் பெண்கள்) மேற்படி அட்டவணை 1 & 2ல் இல்லாதவர்கள் மற்றும் பள்ளிப் படிப்பைக் கைவிட்டவர்கள். |

2.3. **<u>நிகழ்வுகள்:</u>** மேற்கண்ட அட்டவணை 1–ல் உள்ள மூன்று வகையான பிரிவினர்களுக்கு கீழ்கண்ட நான்கு வகையான போட்டிகள் நடத்தப்படும்

i) **<u>வரைபடத்தில் இடங்களைக் கண்டறிதல்</u>** : உலக வரைபடங்கள், இந்தியா, தமிழ்நாடு மற்றும் மாவட்ட அளவில் ஒவ்வொரு அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்ட நூலகங்களில் வைக்கப்படும். போட்டியில் பங்கேற்பவர்கள் ஒருவர்பின் ஒருவராக நூலகத்திற்குள் வந்து அதில் 20 இடங்களை 5 நிமிட கால அவகாசத்தில், போட்டிக்கான நடுவரிடம் காண்பிக்க வேண்டும். வரைபடத்தில் காண்பிக்கப்படவேண்டிய இடங்களாக நாடுகள் / நகரங்கள்/ ஆறுகள்/கடல்கள்/ சமுத்திரங்கள் மற்றும் இதர முக்கியத்துவம் பெற்ற இடங்கள்

போன்றவையாக இருக்கலாம். ஒவ்வொரு வகையான பிரிவுகளிலும் பங்குபெறும் பங்கேற்பாளர்களில் அதிக இடங்களை குறிப்பிட்ட கால அவகாசத்தில் சுட்டிகாட்டும் முதல் இரண்டு நபர்களுக்கு முறையே முதல் மற்றும் இரண்டாம் பரிசுகள் வழங்கப்படும்.

ii) <u>ஞாபகத் திறனை பரிசோதனை செய்யும் வகையில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்ட நூலகத்திலுள்ள புத்தகங்களைக் கண்டறிதல்</u>: 2006–07 மற்றும் 2007–08–ம் ஆண்டில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்ட நூலகங்களில் இதுவரை மொத்தம் 776 புத்தகங்கள் வழங்கப்பட்டுள்ளது. போட்டியாளர்கள் அனைவரையும் நூலகத்திற்குள் வரவழைக்கப்பட்டு, 15 நிமிட கால அவகாசத்தில் (குறிப்புகள் ஏதும் எடுக்காமல்) புத்தகத்தின் பெயர், எழுத்தாளர்களின் பெயர் போன்றவற்றைப் பார்வையிட வேண்டும். பின்னர் போட்டியாளர்கள் பார்த்த புத்தகங்களின் பெயர் மற்றும் புத்தகத்தை எழுதிய எழுத்தாளர்களின் பெயர் ஆகியவற்றை நினைவாற்றலைக் கொண்டு கொடுக்கப்பட்ட தாளில் எழுத வேண்டும். போட்டியில் பங்கேற்கும் பங்கேற்பாளர்கள் அதிகமாக இருந்தால் உதாரணமாக 20க்கும் அதிகமானவர்கள் இருந்தால், பிரிவுகளாகப் பிரித்து 20 பங்கேற்பாளர்கள் வரை நூலகத்திற்குள் அனுமதிக்கலாம். மொத்த போட்டியாளர்களில் ஒவ்வொரு பிரிவுகளிலும் அதிக எண்ணிக்கையிலான புத்தகங்களின் பெயர் மற்றும் எழுத்தாளரின் பெயர் ஆகியவற்றை சரியாக எழுதும் பங்கேற்பாளர்களை தேர்வு செய்து முதல் மற்றும் இரண்டாம் பரிசு வழங்கப்படும்.

iii) **<u>பேச்சுப் போட்டி:</u>** ஒவ்வொரு பிரிவு போட்டியாளர்களுக்கும் பேச்சுப் போட்டி ஒன்று நடத்தப்படும். ஒவ்வொருபோட்டியாளரும் 5 நிமிடம் வரை பேச

அனுமதிக்கப்படுவர். பேசுவதற்கான தலைப்பு, சர்ச்சைகள் ஏற்படுத்தாத வகையில் உள்ளவாறு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை இயக்ககத்திலிருந்து தெரிவிக்கப்படும். சிறந்த முதல் இரண்டு பேச்சாளர்கள் ஒவ்வொரு பிரிவிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர்களின் பேச்சுத் திறன் அடிப்படையில் முதல் மற்றும் இரண்டாம் பரிசு வழங்கப்படும்.

iv) **<u>கவிதை ஒப்பித்தல்</u>:** திருக்குறள், பாரதியார் மற்றும் பாரதிதாசன் எழுதிய கவிதை புத்தகங்கள் மற்றும் பிற கவிதைப் புத்தகங்கள் 2006–07 மற்றும் 2007–08–ஆம் ஆண்டின் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்ட கிராம நூலகங்களில் உள்ளது. இதனடிப்படையில், கவிதை ஒப்புவிக்கும் போட்டி, ஒவ்வொரு வகையான பிரிவினருக்கும் நடத்தப்பெறும். ஒவ்வொரு பிரிவிலுள்ள போட்டியாளர்களும் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்ட நூலகத்திலிருக்கும் புத்தகங்களில் நடுவர் குறிப்பிடும் புத்தகத்திலுள்ள கவிதையை ஒப்புவிக்க வேண்டும். உதாரணமாக ஆரம்ப மற்றும் நடுநிலைப் பள்ளி பிரிவினர்களைச் சார்ந்த போட்டியாளர்கள் பாரதியாரின் கவிதைகளையும், உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளி பிரிவினர்களைச் சார்ந்த போட்டியாளர்கள் திருக்குறளையும், பிற வகையான போட்டியாளர்கள் பாரதிதாசன் போன்றோர் எழுதிய கவிதைகளையும் ஒப்புவிக்குமாறு கேட்டுக் கொள்ளலாம். ஒவ்வொரு போட்டியாளருக்கும் அதிகபட்சமாக 4 நிமிடங்கள் வழங்கப்படும். இதனை அவர்கள் தங்களுடைய நினைவாற்றலிலிருந்து ஒப்புவிக்க வேண்டும். சிறந்த கவிதை ஒப்புவித்த போட்டியாளர்கள் ஒவ்வொரு பிரிவிலிருந்தும் பரிசளிக்க தேர்வு செய்யப்படுவார்கள்.

*அடுத்த ஆண்டில், புதியதொரு வகையில், அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்ட கிராம ஊராட்சியின் நூலகத்தில் படிப்பவர்கள் யார் அதிக நாட்கள் பயன்படுத்தி வருகிறார் என்ற பிரிவு ஏற்படுத்தப்படும். இதற்காக, படிப்பவர்கள் பதிவேடு (Readers Register)ஒன்று நாளைய தேதிவரை (upto date) அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்ட நூலகங்களில் பராமரிப்பதை உறுதி செய்ய வேண்டும்.*

2.4. <u>போட்டி நடைபெறும் இடம்:</u>

நடத்தப்படும் போட்டிகளை அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்ட ஊராட்சி நூலக வளாகத்திற்குள் நடத்தப்படவேண்டும். குறிப்பாக வரைபடத்தில் இடங்களைக் கண்டறிதல், அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்ட நூலகப் புத்தகங்கள் கொண்டு ஞாபகத் திறனை சோதித்தல், கவிதை ஒப்புவித்தல் ஆகியவை நூலகக் கட்டிடத்திற்குள் நடத்தப்பட வேண்டும். பேச்சுப் போட்டிகள் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்ட நூலகக் கட்டிடத்திற்குள் அல்லது அதனையொட்டிய பகுதியில் நடத்தலாம்.

2.5. <u>பரிசுகள்:</u>

2.5.1: முதல் மற்றும் இரண்டாம் பரிசுகள் ஒவ்வொரு பிரிவிலிருந்தும் போட்டிகள் நடைபெற்ற அதே தேதியில் வழங்கப்படும். பரிசுகளின் மதிப்பு கீழ்க்கண்டவாறு

1–வது பரிசு – ரூ.200/–

2–ம் பரிசு – ரூ.150/–

**<u>பங்கேற்பாளருக்கான பரிசு</u>** :

ஒரு பென்சில்/பேனா ரூ.10/–க்கு மிகாமல் ஒவ்வொரு பங்கேற்பாளருக்கும் (முதல் மற்றும் இரண்டாம் பரிசு பெற்றவர்கள் தவிர்த்து) ஒவ்வொரு போட்டிக்கும், அதாவது, அதிகபட்சமாக 100 பங்கேற்பாளர்கள் மொத்த கிராம ஊராட்சிக்கும் சேர்த்து கணக்கில் கொள்ளவேண்டும்.

2.5.2 ஒவ்வொரு போட்டியில் வெற்றி பெற்ற முதல் மற்றும் இரண்டாம் பரிசு பெற்றவர்களுக்கு "**தகுதிச் சான்றிதழ்**", ரொக்கப் பரிசுடனும், மற்ற போட்டியாளர்களுக்கு "**பங்கு பெற்றதற்கான சான்றிதழ்**", சம்பந்தப்பட்ட கிராம ஊராட்சித் தலைவரின் கையொப்பம் இடப்பட்டு வழங்கப்பட வேண்டும்.

## 2.6. <u>ஊரக நூலகப் போட்டிகள் நடத்துவதற்கான வழிமுறைகள் (steps)</u>

### <u>படி–1 (step 1)</u> : <u>கிராம ஊராட்சியின் சிறப்புக் கூட்டம்.</u>

- கிராம ஊராட்சித் தலைவர் போட்டிகள் நடத்துவதற்கான உத்திகள் குறித்து நடவடிக்கை திட்டம் வகுப்பதற்காக கிராம ஊராட்சியின் சிறப்புக் கூட்டத்தை நூலகப் போட்டிகள் நடைபெறும் தேதிக்கு 15 நாட்கள் முன்னதாக கூட்ட வேண்டும்
- கீழ்க்கண்ட நபர்கள் சிறப்பு அழைப்பாளர்களாக கிராம ஊராட்சியின் சிறப்புக் கூட்டத்திற்கு அழைக்கப்படவேண்டும்.

i) சம்பந்தப்பட்ட மாவட்ட ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியத்தின் உறுப்பினர்கள்

ii) அரசு மற்றும் தனியார் பள்ளிக்கூட ஆசிரியர்கள்

iii) சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்கள்

iv) நேரு யுவகேந்திரா தன்னார்வலர்கள்

- போட்டிகள் நடத்துவதற்கான உத்திகள் குறித்து விவாதித்து, விரிவான நடவடிக்கை திட்டம் குறித்தும், கிராம ஊராட்சித் தீர்மானம் இயற்றிட வேண்டும்.

**படி 2 (step 2): விரிவான விளம்பரம்**

- சம்பந்தப்பட்ட கிராம ஊராட்சிகளில் ஊரக நூலகப் போட்டிகள் நடைபெறுவது குறித்த, செய்தியை, டாம்–டாம், துண்டு பிரசுரம், சுவரொட்டிகள் போன்றவை மூலமாக விளம்பரம் செய்யப்படவேண்டும்.
- டிசம்பர் 2009 மாதத்தின் முதல் பகுதியில் நடைபெறும் சிறப்பு கிராம சபை கூட்டத்தில் முக்கிய பொருளாக சேர்த்து விவாதித்திட வேண்டும்.
- 'ஊரக நூலகப் போட்டிகள்' 2006–07, 2007–08–ம் ஆண்டில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்ட கிராம ஊராட்சிகளில் நடைபெறுவது குறித்து மாவட்ட ஆட்சித் தலைவரால் ஒரு சிறப்பு பத்திரிகை செய்தி வெளியிடவேண்டும்.

**படி–3 (step 3) போட்டிகள் நடத்துதல்.**

- அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்ட நூலக வளாகத்திற்குள் மட்டுமே போட்டிகள் நடத்திட வேண்டும். தேவைப்பட்டால், அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்ட நூலகம் அருகிலுள்ள இடத்தில் சில போட்டிகளை நடத்தலாம். போட்டி நடைபெறும் இடத்தை உள்ளூரைச் சேர்ந்த தன்னார்வலர்கள், ஓய்வு பெற்ற அல்லது பணியிலுள்ள பள்ளி ஆசிரியர்கள் மூலமாகவும் அந்த கிராமத்தில் தயார் படுத்திட வேண்டும்.
- ஒவ்வொரு போட்டிக்கான நடுவர்கள் பெரும்பாலும் சம்பந்தப்பட்ட கிராம ஊராட்சியின் அரசு பள்ளியின் ஆசிரியர்கள் / தனியார் பள்ளியின் ஆசிரியர்களாக இருத்தல் வேண்டும். தாமாக முன்வரும் ஓய்வுபெற்ற ஆசிரியர்கள் / பட்டதாரிகள் அந்த கிராம ஊராட்சியில் வசிப்பவர்கள் நடுவர்களாக இருக்கும்படி செய்யலாம்.

- ஒவ்வொரு கிராம ஊராட்சியும் ஒலிபெருக்கி சாதனங்கள், எழுதுபொருட்கள் (அதாவது பேப்பர்கள், பேனா, பென்சில்) சான்றிதழ் அச்சிடுதல் மற்றும் போட்டிகள் நடத்துவதற்கான மற்ற ஏற்பாடுகள் ஆகியவைகளுக்காக ஒரு கிராம ஊராட்சிக்கு ரூ.2,300/–க்கு மிகாமல் எடுத்துச் செய்யலாம்.
- கிராம ஊராட்சியிலிருள்ள நூலகப் போட்டியில் ஆரம்ப, நடுநிலை, உயர்நிலை, மேல்நிலைப் பள்ளி மாணவர்கள், கல்லூரி மாணவர்கள் அப்பகுதியில் வசிப்பவர்கள், ஆதி திராவிட/பழங்குடியினர் உட்பட இப்போட்டியில் பங்கேற்க முனைப்புடன் செயல்பட வேண்டும்.
- ஊரக நூலகங்களுக்கான போட்டிகள் நடைபெறும் அதே நாளில் பரிசுகள் வழங்கப்பட வேண்டும்.

2.7. <u>ஒவ்வொரு கிராம ஊராட்சிக்குமான உத்தேசமான செலவினம்</u>

**2.7.1** போட்டிகளுக்கு வழங்கப்படும் பரிசுகளின் மதிப்பின் அடிப்படையில், மதிப்பீடு செலவினம் கீழ்கண்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ளது.

**<u>அட்டவணை 2 ஒவ்வொரு கிராம ஊராட்சியில் ஊரக நூலகப்போட்டிகள் நடத்துவதற்கான உத்தேச செலவினம்.</u>**

(தொகை ரூபாயில்)

| வ. எண். | போட்டி | வகைப்பாடுகளின் எண்ணிக்கை | முதல் பரிசு (ரூ.200 ஒரு பரிசு) | இரண்டாவது பரிசு (ரூ.150 ஒரு பரிசு) | ஒரு கிராம ஊராட்சிக்கு தேவைப்படும் மொத்த செலவினம் |
|---|---|---|---|---|---|
| 1 | வரைபடத்தில் இடங்களை கண்டறிதல் | 3 | 600 | 450 | 1,050 |
| 2. | அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்ட நூலகப் புத்தகங்கள் குறித்து நினைவாற்றல் சோதிக்கும் போட்டி | 3 | 600 | 450 | 1,050 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 3. | பேச்சுப் போட்டி | 3 | 600 | 450 | 1,050 |
| 4 | கவிதை ஒப்புவித்தல் போட்டி | 3 | 600 | 450 | 1,050 |
| 5 | கலந்துகொள்பவர்களுக்கான பரிசு (அனைத்து வகைப்பாடுகளுக்கும் சேர்த்து) | | | | 1,000 |
| | **மொத்தம்** | | | | **5,200** |
| 6 | ஊரக நூலக போட்டிகள் நடத்திட ஏற்பாடு செய்திட ஏற்படும் செலவுகள் | | | | 2,300 |
| | **பெரு மொத்தம்** | | | | **7,500** |

**2.7.2.** மேலே விவரிக்கப்பட்டுள்ளவாறு ஒவ்வொரு கிராம ஊராட்சியிலும் போட்டிகள் நடத்திட ஏற்படும் மொத்த செலவினம் ரூ.7,500/–க்கு மிகாமல் இருக்கவேண்டும். இந்த செலவினம் கிராம ஊராட்சியின் பொதுக் கணக்கிலிருந்து பற்று வைக்கப்படவேண்டும்.

**2.7.3.** 5,074 கிராம ஊராட்சிகளில் ஏற்படும் உத்தேச மொத்த செலவினம் 5,074 x ரூ7,500 = ரூ.3.81 கோடி.

**2.7.4** ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை ஆணையருடன் கலந்தாலோசித்து, மேற்கண்ட வழிகாட்டு நெறிமுறைகளில், எதிர்காலத்தில் ஏற்படும் சூழ்நிலை மாற்றங்களைக் கருத்தில் கொண்டு, தேவையான மாற்றங்களை செய்ய ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, அரசு முதன்மைச் செயலாளருக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது.

**நிரஞ்சன் மார்டி,**
அரசுச் செயலாளர் (பொறுப்பு)